## *DEPOSITION OF WITNESSES*

### *(Chapter XXIII code of Criminal Procedure)*
### *IN THE COURT OF THE SESSION JUDGE, MAHILA COURT, PUDUKKOTTAI*

### *S.C. NO :18/2018*

| | | |
|---|---|---|
| Deposition of witness for | - | PW - 2 |
| Name | : | திருமதி. அம்மாகண்ணு |
| Father's / Husband's Name | : | பழனியாண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| E-Mail ID | : | |
| Dated | : | 28.12.2020 |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.12.2020.*

**முதல்விசாரணை:-**

நான் தற்போது கொன்னையம்பட்டி, பொன்னமராவதி தாலுகாவில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்கிறேன். அ.சா.1 எனது தங்கை. ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். 1-வது எதிரியின்அண்ணன் ராசுவுடன் என்னுடைய தங்கை ரோடு கான்ட்ராக்ட் வேலைக்கு செல்வது வழக்கம். அந்த சமயத்தில் எனது தங்கைக்கும் 1-வது எதிரி அய்யாவுக்கும் பழக்கம் ஏற்பட்டது. 2014-ம் வருடம் பங்குனி மாதம் அப்பாச்சியம்மன் கோவிலில் திருவிழா நடந்தது. அன்று நாங்கள் கோவிலுக்கு சாமிகும்பிட சென்றுவிட்டோம். அப்போது 1-வது எதிரி அய்யாவு என் தங்கை பவுனாவை கூரைவீட்டில் வைத்து கெடுத்துவிட்டதாக என் தங்கை 4 மாதங்கள் கழித்து சொன்னதன்பேரில் எனக்குத் தெரியும். பின்னர் ஊரில் முக்கியஸ்தர்களை வைத்து ராசு, அய்யாவு மற்றும் அவரது அம்மாவை வைத்து கேட்டோம். 2-வது எதிரி ராசு அதற்கு பணம் வாங்கிகொள்ளுங்கள் திருமணம் செய்துவைக்க முடியாது என்று

சொல்லிவிட்டார். ஊரில் யார் சொல்லியும் கட்டுப்படாததால் நாங்கள் திருமயம் காவல்நிலையத்தில் புகார்கொடுத்தோம். அந்த சமயத்தில் எனது தங்கை 4, 5 மாதங்கள் கர்ப்பமாக இருந்தார். நான் யார் காரணம் என்று கேட்டதற்கு 1-வது எதிரி அய்யாவுதான் காரணம் என்று என் தங்கை சொன்னார். இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை</u>:-

போலீசார் விசாரித்தபோது 2014-ம் வருடம் பங்குனி மாதம் அப்பாச்சியம்மன் கோவில் திருவிழாவிற்கு சென்றுவிட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு சொல்லியுள்ளேன். அய்யாவு எனது தங்கையை கூரைவீட்டில் வைத்து கெடுத்துவிட்டதாக 4 மாங்கள் கழித்து என் தங்கை என்னிடம் சொன்ன விவரத்தை போலீசாரிடம் நான் சொன்னேனா என்றால், நான் சொன்னேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2-வது எதிரி ராசு எவ்வளவு வேண்டுமானாலும் பணம் வாங்கிக்கொள்ளுங்கள், 1-வது எதிரிக்கு என தங்கையை திருமணம் செய்துவைக்க முடியாது என்று சொன்ன விவரத்தை போலீசாரிடம் நான் சொன்னேனா என்றால், சொன்னேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. கோவில் திருவிழா முடிந்து 4, 5 மாதங்கள் கழித்து என் தங்கையிடம் கர்ப்பத்திற்கு யார் காரணம் என்று கேட்டேன் என்ற விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால், சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் தங்கை 1-வது எதிரியின் அண்ணனோடு வேலைக்கு சென்ற விவரத்தை போலீசாரிடம் சொன்னேனா என்றால், சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. திருமயம் காவல்நிலையத்திற்கு சென்று என்தங்கை அனைத்து விவரத்தையும் போலீசாரிடம் சொன்னாரா என்றால், சொன்னார். போலீசார் என் தங்கை சொன்ன விவரங்களை எழுதிக்கொண்டார்களா என்றால், எழுதிக்கொண்டார்கள். காவல்நிலையத்திற்கு நான், என் தங்கை, என் அண்ணன் சென்றோமா என்றால், ஆமாம். போலீசார் எழுதியதில் என் தங்கையிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால், வாங்கினார்கள். அந்த புகார்வாக்குமூலத்தில் நானும் என் அண்ணனும் சாட்சி கையெழுத்து போட்டோமா என்றால், ஆமாம். போலீசார் உடனே நடவடிக்கை எடுத்தார்கள். அதில் திருப்தி ஏற்படாமல்தான் புதுக்கோட்டை காவல் கண்காணிப்பாளரை

சந்தித்தோமா என்றால், ஆமாம். புகார் கொடுத்ததற்கும், காவல் கண்காணிப்பாளர் அலுவகத்திற்கு வந்ததற்கும் இடையே ஒருமாதம் இடைவெளி இருக்குமா என்றால், இருக்கும். கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் புகார் எழுதிக்கொடுத்தோமா என்றால், ஆமாம். என் தங்கை சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து நடந்ததா என்றால், நடந்தது. 1-வது எதிரி கர்ப்பத்திற்கு நான் காரணம் இல்லை, நான் திருமணம் செய்துகொள்ளமுடியாது என்று மறுத்துவிட்டாரா என்றால், ஆமாம். எதிரிகள் எங்களைவிட வசதியானவர்களா என்றால், ஆமாம். அ.சா.1 எனது தங்கை என்பதாலும், எதிரிகள் எங்களை விட வசதியானவர்கள் என்பதாலும், அ.சா.1-ஐவிட்டு பொய்யாக புகார்கொடுத்து, அதன்பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தங்கையால் ஊரில் எங்களுக்கு கெட்டபெயர் என்றால், ஆமாம். என் தங்கையை நான் கண்டித்து கேட்கவில்லை என்றால், கேட்கவில்லை நான் வேலைக்கு சென்றுவிடுவேன். என் அண்ணனும் வேலைக்கு சென்றுவிடுவார். என் தங்கையும் ரோடுவேலை, கூலிவேலைக்கும் சென்றுவிடுவார். என் தங்கை பக்கத்து ஊர்களிலும் வேலைக்கு செல்வார். ரோடுவேலை வெளியூரில் நடக்கும்போது என் தங்கை அந்த ஊரிலேயே தங்கி வேலை பார்த்தார் என்றால், இல்லை. புதுக்கோட்டைக்கும் எங்கள் ஊருக்கும் 50 கி.மீ துாரம் இருக்கும். சில நாட்கள் தங்கி வேலை பார்ப்போம் என்றால் ஆமாம். அப்போது என் தங்கையும் தங்கி வேலை பார்ப்பாரா என்றால் ஆமாம்.

**<u>மறுவிசாரணை</u>:-** இல்லை.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Mahila Court, Pudukkottai.*